1993 அக்டோபர் 29]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண். 72, திரு. செ. பெருமாள் மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

72—

ஏற்காடு தொகுதியில் கூட்டுறவு சர்க்கரை ஆலை.

*9605—திரு. செ. பெருமாள்:

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்காடு தொகுதியில் கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. செ. பெருமாள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் இல்லை என்ற சொல்லுக்கே இடமில்லை என்ற சொற்களுக்கேற்ப, எனது தொகுதியிலே துணை மின் நிலையம் அமைப்பதற்கான உத்தரவினைப் பிறப்பித்து, நிதியையும் ஒதுக்கித் தந்து, 1994-ஆம் ஆண்டு இறுதிக்குள் முடிப்பதற்கு உறுதியை வழங்கியிருக்கிறார்கள். அதற்காக, தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது தொகுதி மக்களின் சார்பாகவும், எனது சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, இந்த சர்க்கரை ஆலையை அமைப்பதற்கு அங்குள்ள பொதுமக்கள், ''நீங்கள் சப்-பவர் ஸ்டேஷனைக் கொண்டு வந்து விட்டீர்கள்; இங்கு வாழ்கின்ற மக்கள் விவசாயிகள்; பெரும்பாலும், விவசாயத்தையே நம்பியிருக்கிறார்கள்; அந்தக் குறையைத் தீர்த்துவிட்டீர்கள்; அதேபோல், இங்கு சர்க்கரை ஆலையைக் கொண்டு வந்தால், இந்தப் பகுதியிலே இருக்கிற விவசாயிகள் பயனடைவார்கள்; நீங்கள் எப்படியாவது முதலமைச்சரிடத்திலாவது, அமைச்சரிடத்திலாவது கூறி இது வருவதற்கு நீங்கள் முயற்சி செய்ய வேண்டும்'' என்பதை என்னிடத்திலே குறையாகச் சொல்லியிருக்கிறார்கள். ஏனென்று கேட்டால்.......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. செ. பெருமாள், வினாவாகக் கேளுங்கள்.

திரு. செ. பெருமாள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் பகுதியிலே இருக்கிற விவசாயிகள் மோகனூர் சுகர் பேக்டரிக்குச் செல்ல வேண்டிய நிலைமை இருக்கிறது. இங்கிருந்து அங்கு செல்ல வேண்டுமென்றால் 100 கிலோமீட்டர் ஆகிறது. இங்கு சுமார் 500 ஏக்கர் நிலத்திலே கரும்பு சாகுபடி செய்கிறார்கள். அந்த வகையிலே, அக்குறையினைத் தீர்ப்பதற்கு இங்கு சர்க்கரை ஆலை வந்தால் நன்மையாக இருக்கும். என்பதைக் கருத்திற் கொண்டு—என்னுடைய தொகுதி மக்கள் தொடர்ந்து என்னிடத்திலே கூறிக் கொண்டிருக்கிறார்கள்—அடுத்த நிதியாண்டிலாவது, மீண்டும் பரிசீலனை செய்து, சர்க்கரை ஆலையைக் கொண்டு வருவதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வாரா என்பதைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதியான ஏற்காடு, அதிகமான மலைப் பகுதியையும், காட்டுப்பகுதியையும் கொண்டிருக்கிற பகுதி. அங்கே கரும்பு சாகுபடி செய்வதற்கான சாத்தியக் கூறுகள் அறவே இல்லை. மாண்புமிகு உறுப்பினர், அங்கே ஐநூறு ஏக்கர் நிலத்தில் கரும்பு விளைவிப்பதாகச் சொன்னார்கள். ஒரு சர்க்கரை ஆலை துவக்கப்பட வேண்டுமென்றால் குறைந்த பட்சம் 15,000 ஏக்கரிலாவது அங்கே கரும்பு பயிரிடப்பட வேண்டும், காரணம் ஒரு நாளைக்கு 2,500 டன் கரும்பைப் பிழிந்தால் தான் ஆலை பொருளாதார ரீதியில் சாத்தியமாக இருக்கும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய பகுதியில் வெறும் 500 ஏக்கரை மாத்திரம் வைத்துக் கொண்டு ஆலை அமைப்பது என்பது நடைமுறை சாத்தியம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண். 73, திரு கே. கந்தசாமி, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

73—

விழியிழந்தோர் பள்ளிக் குழந்தைகளின் உணவுக்காகும் தொகையை உயர்த்துதல்

*20302—திரு. கே. கந்தசாமி:

மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—